மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் சம்பந்தப் பட்ட தொழிலாளர் இழப்பீட்டு ஆணையாளர் தீர்ப்பளித்த இழப் பீட்டுத்தொகை எக்காரணத்தினாலாவது வசூல் செய்ய இல்லாமல் இருக்கும்பொழுது விபத்தின்பொழுது நிலையான அங்கஹீனமுற்ற தொழிலாளருக்கோ அல்லது தொழிலாளர் இறந்துபடின அன்னாரைச் சார்ந்திருந்த உறவினருக்கோ இந்நிதியிலிருந்து உதவி கிடைக்கும்.

(உ) ஒருவருக்கு ரூ. 1,000 இந்நிதியிலிருந்து அளிக்கப் பட்டது.

திறமையுள்ள தொழிலாளர்களுக்கு நிர்வாகப் பயிற்சி

* 476 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

திறமை படைத்த தொழிலாளர்களை தேர்ந்தெடுத்து அவர் களுக்கு நிர்வாகத் துறையில் பயிற்சி அளிக்கும் உத்தேசம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : திறமை மிக்க தொழிலாளர் களுக்குத் தொழில் நிறுவன நிர்வாகத்தில் பயிற்சி அளிப்பதற் கான செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை

திருப்பூருக்கு மின் வழங்கல்

* 477 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :—

(அ) திருப்பூர் மின்வாரியத் துணை நிலையத்தில் Sub-station மின் சக்தியின் அழுத்தம் குறைவாக இருப்பதின் காரணமாக தொழில்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், அதன்மேல், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

1973 நவம்பர் 28]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : திருப்பூரில் 66 கிலோவாட் சப்-ஸ்டேஷனுக்குப் பதிலாக ரூ. 20 லட்சம் செலவிலே, 110 கிலோ வாட் சப்-ஸ்டேஷன் நிறுவ வேலை நடந்து வருகிறது. சனவரியில் அந்த வேலை முடிவடைந்துவிடும். விரைவில் நிலைமை சீரடைந்து விடும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மின்சார வேஸ்டேஜ் ஜாஸ்தியாக இருக்கிறது என்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி வேஸ்டேஜ் குறைவதற்காக அதிகமான சப்-ஸ்டேஷன்ஸ் திறந்தால், வேஸ்டேஜ் குறையும் என்ற கருத்து இருக்கிறதே, அப்படியானால், அந்த முறையிலே சப்-ஸ்டேஷன்ஸ் அமைக்கப் படுவதற்காக ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நான் ஏற்கனவே சொன்ன மாதிரி, மாஸ்டர் பிளானை ரூ. 50 கோடிக்கு ஒரு திட்டம் உரு வாக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு, டிஸ்டிரிபியூஷன் வோல் டேஜை இன்கிரீஸ் பண்ணுவதற்காக ரூ. 10 கோடி செலவு செய்ய லாம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பரமக்குடியில் மின்வாரிய அலுவலகக் கட்டடம்

*478 வினா—**திரு. வீ. மலைக்கண்ணன் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

பரமக்குடியில் மின் வாரிய மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பரமக்குடியில் ரூ. 2,65,000 செலவில் மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் கட்டுவதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. தொ. க. சிறைமீட்டான் : பேரவைத் தலைவரவர்களே, 20, 30 ஆண்டுகளுக்கு முன்னால், பரமக்குடியில் ரூ. 4 இலட்சம் செலவில் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. அதில் ஒரு பகுதி இன்னும் மதுரையிலேயே இயங்கிக்கொண்டு வருகிறது. தற்பொழுது கட்டப்பட்டு வரும் கட்டிடத்தில் மதுரையில் இருக்கும் பகுதியை யும் இணைக்க உத்தேசம் இருக்கிறதா ? இல்லாவிட்டால், அதையும் இணைத்து அலுவலகம் ஒரே இடத்தில் அமைத்துத்தர அரசு உத் தேசிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.